ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1203/9 – 2001 සැප්තැම්බර් 24 වැනි සඳුදා – 2001.09.24

**1203 / 9 ஆம் இலக்கம் – 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை**

( அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது )

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ.- பீ. 21/78.

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு.

கொழும்பு,
09.12.2001.

**கட்டளைச் சட்டம்**

1. இக் கட்டளைச் சட்டம் 2001 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, மருத்துவ பட்டப் பின்படிப்பு நிருவக (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்பட்டதன் மேல் வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. இரண்டாயிரமாம் ஆண்டு ஒக்டோபர் 27 ந் திகதி 1155/20ஆம் இலக்க *அதிவிஷேச கசெற்றில்* வெளியிடப்பட்ட 2000ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவக (திருத்தக்) கட்டளைச் சட்டத்தினால் கடைசியாக திருத்தப்பட்டவாறானதும், 1980 ஆம் ஆண்டின் ஏப்ரல் 10 ந் திகதிய 83/7 ஆம் இலக்க, *அதிவிஷேட கசெற்றில்* வெளியிடப்பட்டதுமான 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மருத்துவப் பட்டப் படிப்பு நிறுவகக் கட்டளைச் சட்டம், இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அதன் 13 ஆம் பந்தியில், (ண) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் -

"(த) மேகநோயியல்";

(2) அதன் 14 ஆம் பந்தியில் :-

(i) அப் பந்தியின் (2) (2) (iii) என்னும் உட்பந்தியை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் -

"(iii) பிணியாய் நிலையஞ் சார் புற்று நோயியல் மற்றும் மேக நோயியல் சிறப்புக் கூறு தொடர்பில், (2) (இ) (i) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பயிற்சி நிலையங்களிலிருந்து ஒன்பது பிரதிநிதிகள் ; அவர்களில் குறைந்த பட்சம் மூவராவது பின்வரும் பிரதான பயிற்சி நிலையங்களிலிருந்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும் :-

(அ) மகரகம புற்றுநோய் நிருவகம் ; அத்துடன்

(ஆ) மத்திய எஸ். ரீ. டி. பிணியாய் நிலையம்.".

(ii) அப் பந்தியின் (3) ஆம் உட்பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(3) ஒராம், இரண்டாம் உட்பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட கற்கைச் சபையின் அத்தகைய உறுப்பினர்கள் யாவரும் பயிற்றுவிப்பாளர்களாக இருத்தல் வேண்டும் ; குடும்ப மருத்துவம் பொது வைத்தியம் மற்றும் மேக நோயியல் என்பவற்றுக்கான சிறப்புக் கூறுகளில் தவிர, பயிற்றுவிப்பாளர் ஒருவர், சபையினாற் சான்றுப்படுத்தப்படுவதற்கான சிறப்புரிமைகளுக்கான தகவுத்திறனுக்கெனச் சபைச் சான்றுப்படுத்துகைக்குப் பின்னர் மூன்றாண்டு அனுபவத்தைக் கொண்டுள்ள ஆள் ஒருவராக, அல்லது பிணியாய் நிலைய மருவிய சிகிச்சை நெறிகளின் விடயத்தில், மருத்துவக் கலாநிதிப் பட்டத்தை (எம். டீ.) அல்லது இயைபான துறையில் அதற்குச் சமனான பட்டத்தைப் பெற்ற பின்னர் ஐந்து வருட அனுபவத்தைக் கொண்டுள்ள ஆள் ஒருவராக, அல்லது இயைபான துறையில் பயிற்றுவிப்பாளர் ஒருவராக மூன்று ஆண்டு அனுபவத்தைக் கொண்டுள்ள ஆள் ஒருவராக இருத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், மேக நோயியலில் இயைபான துறை சமுதாய மருத்துவமாகும். மேக நோயியலில் பயிற்றுவிப்பாளராக இருக்கும் ஒருவர், சுகாதார அமைச்சினால் மேக நோயியலில் நிபுணரொருவராக அல்லது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிலையமொன்றில் தொழில்புரியும் வேறொரு மருத்துவத் துறையிலான நிபுணர் ஒருவராக ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஆள் ஒருவராக இருத்தல் வேண்டும் :

ஆயின், மேலும் உட்பந்தி (1) (ஈ) என்பதிலும் உட்பந்தி (2) (இ) என்பதிலும் குறிப்பீடு செய்யப்பட்ட பயிற்சி நிலையங்களிலிருந்தான பிரதிநிதிகள், விடயத்துக்கேற்றாற் போல, பயிற்சி நிலையங்களிலிருந்து சுகாதார அமைச்சின் இயைபான சிறப்புக் கூறுகளின் பயிற்றுவிப்பாளர்களால் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவு செய்யப்பட்டவர்களான அத்தகைய ஆட்களின் பெயர்களைப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.".

(3) அதன் 25 ஆம் பந்தியில் "மருத்துவவியற் சிறப்புக்கூறு" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கஞ் செய்து, அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

"மருத்துவவியற் சிறப்புக்கூறு" என்பது, மயக்கமருந்தூட்டியல், சமுதாய மருத்துவம், குடும்ப மருத்துவம், மற்றும் பொது வைத்தியம், மருத்துவம், மகப்பெற்றியல் மற்றும் பெண்ணோயியல், கண்மருத்துவவியல், பிணியாய்வியல், குழந்தை மருத்துவம், மனநோயியல், கதிரியக்க மருத்துவம், அறுவை மருத்துவம், சட்ட மருத்துவம், நுண்ணியரியல், செவிக் குரல்வளை நோயியல், ஊடுகதிர் மருத்துவம், புற்று நோயியல், பல் அறுவைச் சிகிச்சை, மருத்துவ நிருவாகம், உடல்நல விஞ்ஞானங்கள், சரும நோயியல் மற்றும் மேக நோயியல் அல்லது நிருவாகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் மீது ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்படும் வேறு ஏதேனும் சிறப்புக்கூறு என்று பொருளாகும்.".

10-221/1

---

ச. வ.-பீ. 21/78.

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஆக்கப் பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு.

கொழும்பு,
09.12.2001.

**கட்டளைச் சட்டம்**

1. இக் கட்டளைச் சட்டம் 2001 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கமத்தொழில் பட்டப் பின்படிப்பு நிருவக (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம் என்பதுடன், 2001 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 02 ஆந் நாளன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டு திசெம்பர் 26 ந் தேதிய 68/11 ஆம் இலக்க அதிவிஷேச கசெற்றில் வெளியிடப்பட்டதும், காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானதுமான 1979 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கமத்தொழில் பட்டப் பின்படிப்பு நிருவகக் கட்டளைச் சட்டம் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது: -

(1) அதன் 10 ஆம் பந்தியில் -

(i) அப் பந்தியின் 1 (அ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் : -

"(ங) சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டனவாகக் கருதப்பட்ட பல்கலைக்கழகங்களின் கமத்தொழில், விலங்கு மருத்துவ அத்துடன் விலங்கு விஞ்ஞானங்கள் என்ற துறைகளின் துறைத் தலைவர்கள் அல்லது அவர்களின் நியமத்தர்கள்.";

(ii) அப்பந்தியின் (2) (அ) என்னும் உட்பந்தியில் "ஓர் உறுப்பினர்" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஒவ்வொரு சிறப்புக் கூறினதும் ஒரு சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர் அல்லது சிரேட்ட விரிவுரையாளர்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

4. அதன் 13 ஆம் பந்தியில் - (i) என்னும் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன் மூலமும் : -

"(i) உயிரியற் - புள்ளி விபரங்கள்";

5. அதன் 14 ஆம் பந்தியில், அப் பந்தியின் (1) (இ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் : -

"(ஈ) சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் கமத்தொழில் துறையிடையேயிருந்து, அந்தந்த துறைச் சபையினால் தனது உறுப்பினர்களிடையேயிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களும் மூன்றுக்கு மேற்படாதவர்களும் ஒவ்வொரு சிறப்புக் கூறிலிருந்தானவர்களுமான ஒரு சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர் அல்லது சிரேட்ட விரிவுரையாளர்.".

10 - 221/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.